பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 64

19.08.2026

லஞ்சம் கேட்டு பெற்ற வனசரக அலுவலர் கைது

புகார்தாரர் திரு.சுரேஷ்குமார், வன ஒப்பந்ததாரராக உள்ளார். இவர் தென்காசி மாவட்டம் சிவகிரி வனச்சரக அலுவலகத்தில் ரூ.3,69,000/- மதிப்பிலான இரண்டு பில்களை சமர்ப்பித்து அதற்கான தொகையை வனச்சரக அலுவலகத்திலிருந்து பெற்றுள்ளார். திரு.கதிரவன், வனச்சரக அலுவலர், சிவகிரி வனச்சரக அலுவலகம் தென்காசி மாவட்டம் அவர்கள் தனக்கு லஞ்சமாக ரூ.1,00,000/- (20% கமிசன் தொகை) கொடுக்க வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தென்காசி பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 19.08.2026, வழக்கு பதிவு செய்யப்பட்டு, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.கதிரவன், வனச்சரக அலுவலர், அவர்கள் ரூ.1,00,000/- லஞ்ச பணத்தை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

PRESS RELEASE – 64
19.08.2026

FOREST RANGER ARRESTED FOR BRIBE

The complainant, Tr. Sureshkumar, is a forest contractor. The complainant had submitted two bills amounting to Rs.3,69,000/- at the Forest Range Office, Sivagiri, Tenkasi District and received the bill amount. Tr.Kathiravan, Forest Ranger, Forest Range Office, Sivagiri, Tenkasi District demanded a bribe of Rs.1,00,000/- (20% commission amount) from the complainant. Unwilling to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Tenkasi detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (19.08.2026). During trap proceedings, Tr.Kathiravan, Forest Ranger, received the bribe amount of Rs.1,00,000/- from the complainant. The Forest Ranger was arrested and remanded.